பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.லி.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 23 (9—10—68) புதன் ★ வெளியூர்: புரட்டாசி 24 (10—10—68) வியாழன் [இதழ்: 94

தீண்டாமைக் குற்றம் புரிந்தோர்

தேர்தலில் நிற்கத் தடை

புதுடில்லி, அக். 9—

"தீண்டாமைக் குற்றங்களுக்காகத் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்டவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராகவோ சட்டமன்ற உறுப்பினர்களாகவோ இருப்பதற்குத் தகுதியற்றவர்களாக்கப்பட வேண்டும்"

என, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் இடைக்கால அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

போட்டி என்பது அழிப்பதற்கல்ல!

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் கூடாது

காங்கிரசு வீழ்ச்சியின் காரணத்தை உணருவீர்!

கழகத் தோழர்கட்கு இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, அக். 9—

"'போட்டி' என்பது வேறு; 'போர்' என்பது வேறு; போரில்தான், வெற்றி—தோல்வி என்பது ஏற்படும்; போட்டியில் அப்படி அல்ல!

"விரும்பத்தகாத ஆதிக்கத்தை -- நிலையை -- வலிவை -- அழித்து வெற்றி கொள்வது போர்! போட்டி என்பது, யாரையும் அழிப்பதற்கானது அல்ல!

"இந்த வட்டத்தில் கழக வேட்பாளராக ஆவதற்கு 9-பேர் போட்டி போட்டார்கள்; ஒருவருக்குத்தான் போட்டியிடும் உரிமை கிடைக்க வாய்ப்பு இருந்தது. மற்ற தோழர்களுக்கு வாட்டமோ வருத்தமோ இருக்க நியாயம் இல்லை. எழுத்துப் போட்டி -- பேச்சுப் போட்டி -- ஓட்டப் பந்தயம் ஆகியவற்றில், முன்னால் வருகிறவர் கோப்பையைப் பெறுவதுபோலத்தான் இதுவும்! ஒருவரையொருவர் அழிப்பதல்ல -- ஒருவரையொருவர் மீறி நின்று வெற்றிபெறுவது!

"வள்ளுவரின் குறளை, 'பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் இல்லாதது கட்சி' என்று மாற்றிக்கொள்வோம்; கடமைகள் வேறுபடலாம்; ஆனால், அவரவர் நிலை மாறுவது கூடாது! குழுக்கள் இருக்கக்கூடாது! பாழ் செய்யும் உட்பகையும் இருக்கக்கூடாது!

"காங்கிரசு ஏன் கெட்டது? லோகமான்ய பால கங்காதர திலகரும், லாலா லஜபதிராயும், சிதம்பரனாரும், குமரனும், பாரதியும் வளர்த்த காங்கிரசு ஏன் கெட்டது? காந்தியாரும் நேருவும் வளர்த்த காங்கிரசு இத்தனை விரைவில் கெட்டது ஏன்? -- பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் இருந்ததால்தான்!

"வாழ்ந்த காங்கிரசு வீழ்ந்தது, நமக்கெல்லாம் ஓர் எச்சரிக்கை! ஓர் பாடம்! இதற்கு ஒரு புதிய புத்தகம் தேவையில்லை! ஏற்கனவே எழுதப்பட்டு நம்முன் உள்ளது!

"காமராசரும் சுப்பிரமணியமும் வேறுபட்டால் என்ன நடக்கும் என்பது நாம் அறிந்தது; இராஜாஜியும் காமராசரும் வேறுபட்டால் என்ன ஆகும் என்பதைக் கடந்த பத்தாண்டுக்கால வரலாறு காட்டுகிறது!

"அங்கே படிந்த பாசி இங்கே படியவேண்டாம்! அங்கே ஏற்பட்ட கறை இங்கே ஏற்படக்கூடாது! நாம் அத்தனைப்பேருக்கும், 'கழகம்' என்ற உணர்வு வேண்டும்!"

இவ்வாறு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 90-வது வட்டத்தில் நேற்று நடைபெற்ற மாநகராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"சனநாயகத்தில் போட்டி என்பது இருக்கும்; அது தவறானதொன்றல்ல.

ஒரு வட்டத்தில் 14 பேர்கூட கழகத்தின் வேட்பாளராக இருக்க விரும்பியதுண்டு: கிடைக்காதவர்களுக்கு வருத்தம் இருக்கலாம்.

'கிட்டாதாயினும் வெட்டன மற' என்ற பழமொழி நீண்ட காலமாக உள்ள ஒன்று.

போட்டி போட்டு முறைப்படி தலைமைக் கழகத்தில் அதற்குரிய குழுவும் ஆராய்ந்து முடிவு கூறிய பின், எல்லோரும் சேர்ந்து கட்சியினால் நிறுத்தப்பட்டவரின் வெற்றிக்குப் பாடுபடுவதுதான் சனநாயகம்!

தனக்குக் கிடைக்கவில்லை என்ற வாட்டமிருந்தாலும், எதிர்த்து வேலை செய்ய முற்படுவது அவருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் கேடு தேடிக்கொள்ளும் ஒரு முயற்சியாகும்.

கழகம் மாநகராட்சியில் பொறுப்பேற்பதற்கு முன்பு மேயர் என்பவரைப் பார்த்தவர் யார்? அடையாறு அரண்மனை விருந்திலும், கன்னிமாரா விருந்திலும், காஸ்மாபாலிடன் கிளப் விருந்திலுமதான் அவர்களைக் காண முடியும்!

அரண்மனைகளில் உலவியவர்களை எல்லாம் ஆலமரத்தடிக்குக் கொண்டுவந்தது கழகம்! முச்சந்தியிலும், நாற்சந்தியிலும் உலவச் செய்தவர்கள் நாம்!

அதற்கு முன் மேயர் முகத்தை யார் பார்த்திருப்பார்கள்! கழகத்தின் சார்பில் வந்த மேயர்கள் மக்கள் தொடர்புகொண்டவர்களாக இருந்தார்கள்.

மாநகராட்சியில் கழகம் பொறுப்பேற்ற பிறகு கழகக் கவுன்சிலர்கள் தேனீக்கள் போல -- சிற்றெறும்புகளைப் போல -- வீதிதோறும் வீடுகள்தோறும் ஆற்றிய பணிகளைக் கண்டிருப்பீர்கள்!

கழகம் 1959-ல் மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்றது; இங்குள்ள பாட்டானகுப்பத்திலும், ஆயோத்திகுப்பத்திலும் அதற்கு முன் இருந்த விளக்குகள் எத்தனை? இப்போதுள்ளவை எத்தனை?

இவையெல்லாம், வாயால் பேசித் தெரிந்துகொள்ள வேண்டியவை அல்ல! புதிதாகப் போடப்பட்ட அந்தச் சாலைகளும், விளக்குகளும் போதும்! அவையே அந்தக் கதையைச் சொல்லும்!

உழைப்பாளி மக்கள் வாழும் இந்த அழகிய கடற்கரைப் பக்கத்தில் உள்ள குடிசைகள் நிறைந்த அயோத்தியாகுப்பத்தில் 1959-க்கு முன் இருந்தது ஒரு விளக்கு! ஆலமேலு அப்பாதுரை, ஒன்றாக இருந்ததை ஆறாக மாற்றினார்கள்! 1964-ல் நாகராசன் இந்த வட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்; விளக்குகளின் எண்ணிக்கை 40-ஆக ஆயிற்று!

பத்தாண்டுக் காலத்துக்கு முன் இந்த மாநகரின் நிலைமை எப்படி இருந்தது என்பதை இப்போது உள்ள நிலைமையோடு ஒப்பு நோக்கினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தெரியும்!"

காந்தி விழாவையொட்டிக் கருணை நடவடிக்கை

சென்னை, அக். 8—

காந்தியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டித் தமிழக அரசு, சிறைக் கைதிகளுக்குத் தண்டனை காலக் குறைப்பு வழங்கியதைத் தொடர்ந்து மாநிலமெங்கிலுமுள்ள மத்திய சிறைகள் -- துணைச் சிறைச்சாலைகளிலிருந்து, குறைந்தகாலத் தண்டனை பெற்றுள்ள சுமார் 4,000 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுவருகின்றனர்.

துரோகம் வேண்டாம்!

எச்சரிக்கையை ஏற்றுத் திருந்திக்கொள்க!

சென்னை, அக். 9 —

'சில வட்டங்களில் சிலரிடையே ஓர் எண்ணம் உருவாகியுள்ளது; 'நமக்குத்தான் கிடைக்கவில்லையே -- காங்கிரசாவது வெற்றி பெறட்டும் -- கோடரிக் காம்பாக ஆனாலும் ஆவேன் -- கழக வேட்பாளர் வெற்றி பெற விட மாட்டேன்' என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

'இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன; நான் ஏற்கனவே எச்சரித்திருக்கிறேன்; திருந்திக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்; திருந்தாமலிருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டே தீரும்!

"நடவடிக்கை என்பது, 'களை' எடுத்தலே அல்லாமல் பயிரைப் பாழ்படுத்துவது அல்ல! தக்க நேரத்தில், களை எடுத்தெறியப்படுவது நல்லதே; கூடவே இருந்து அடுத்துக் கெடுப்பதைவிட, எதிரியாக இருந்தாலும் பரவாயில்லை! ஏனெனில், அத்தகையவர் நடவடிக்கைகள் என்ன என்பது தெரியும்.

"கட்சியிலிருந்து பொறுப்புகளைப் பெற்று செல்வாக்கில் இருந்தவர்கள், வெளியே போனாலும் அதே செல்வாக்குடன் விளங்கலாமென்று எண்ணுவது, வரலாறு தெரியாததால் வந்த நிலை ஆகும்!

"இதைவிட்டுத் தனி இடம் போகிறவர்களுக்கு அதே மதிப்புக் கிடைக்காது. இங்கே இருந்திருந்தால் சிலர் அமைச்சர்களாகக்கூட ஆகியிருப்பார்கள்; இப்போது அவர்கள் எங்கே? அவர்களது விலாசம் என்ன?

"பெரும்பாலான வட்டங்களில் கட்டுப்பாடான நிலை உள்ளது; இதையெல்லாம் உணர்ந்து, மாறுபாடாக உள்ளவர்களை திருந்திக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்; இல்லையேல், சிந்துவாரற்று -- இருக்கிற இடம் தெரியாது -- சிரித்த முகம் காண முடியாது போவார்கள்! அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாவார்கள்!

"அண்ணாவாகிலும் இரக்கம் உடையவராக இருப்பார்; எனக்கு அத்தகைய இரக்கம் இல்லை; என் தொகுதியிலே இதனால்தான எனக்குள்ள கெட்ட பெயர்-"

--அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

(90-வது வட்டத் தேர்தல் கூட்டத்தில்)

'தெரிவித்த யோசனைக்கு மாறாக நடக்க அனுமதியோம்'

கருநாடக அரசின் அணை கட்டும் திட்டம் பற்றி அமைச்சர் கருணாநிதி

சென்னை, அக். 8—

"காவிரியின் கிளை ஆறுகள் மீது அணைகள் கட்ட கருநாடக அரசு முடிவு செய்திருப்பது பற்றி ஏற்கனவே டெல்லியில் விவாதிக்கப்பட்டு, தமிழக அரசுச் சார்பில் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன; அதன் அடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

"தமிழக அரசு தெரிவித்துள்ள யோசனைகளுக்கு முரணாகவோ, மாறுபட்டதாகவோ கருநாடக அரசு திட்டங்களை நிறைவேற்றினால், அதை இந்த அரசு ஏற்காது"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சட்டமும் தண்டனையும் சமுதாயத்தைத் திருத்தாது!

நம்மை அடிமைகளாகக் கருதிய ஆங்கிலேயரின் சட்டங்கள் இப்போது பொருந்துமா?

'மனமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சட்டமியற்றப்பட வேண்டும்'-- சட்ட அமைச்சர் செ. மாதவன் கருத்தும் விளக்கமும்

சென்னை, அக். 8---

"குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பதில் பழைய பிரிட்டிஷ் முறைகளையே பின்பற்றிக்கொண்டிருப்பதில் பயனில்லை; அதன் மூலம் சமுதாயத்தைத் திருத்த முடியாதென்றே தோன்றுகிறது.

"பிரிட்டிஷார் இந்தியர்களை அடிமைகளைப்போல் நடத்தினார்கள். சமூகத்தைச் சீர்திருத்துவதைவிட, தண்டனைகள் கொடுப்பதில்தான் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தினார்கள். தண்டனைகளால் மட்டும் தண்டிக்கப்பட்டவர்களைத் திருத்திவிட முடியுமென்று நான் நினைக்கவில்லை.

"குற்றஞ்சாட்டப்பட்டவரைத் தண்டிப்பதாலோ, அல்லது விடுவிப்பதாலோ சமூகத்தைத் திருத்திவிட முடியாது.

"நான் அரசியல் கைதியாக இருந்திருக்கிறேன்; வழக்கறிஞராக இருந்திருக்கிறேன்; இப்போது சட்ட - சிறைச்சாலைகள் துறை அமைச்சராக இருக்கிறேன்; சிறைச்சாலைகளில் பின்பற்றப்படும் முறைகள், கைதிகளைச் சீர்திருத்தம் செய்யாது என்பதே என்னுடைய அனுபவமாகும்.

"கிரிமினல் சட்டங்கள், வழக்குகளைத் துரிதமாக முடிவு செய்வதற்கு இடையூறுகளாக இருக்கின்றன; பொய் வழக்குகளை ஜோடிப்பதாகப் போலீசார் மீதும், நிர்வாகத்தின் மீதும் அடிக்கடிக் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன; இந்தச் சட்டங்களெல்லாம் எளிதாக்கப்பட வேண்டும். குற்றம் புரிந்தவர்கள் எளிதாகத் தண்டிக்கப்படுவதற்கும், நிரபராதிகள் எளிதாக விடுதலை செய்யப்படுவதற்கும் வசதியாகச் சட்டங்கள் எளிதாக்கப்பட வேண்டும்"

என்று சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் கருத்தறிவித்தார். சிறுவர்களுக்கான வழிகாட்டும் நிலையத்தின் சார்பில், வாழ்க்கை நெறி தவறிய பெண்களைப் பற்றிய ஆராய்ச்சி நூலை வெளியிட்டு வாழ்க்கை நெறி தவறியவர்களின் மறுவாழ்வுக்கான கருத்தரங்கையும் துவக்கிவைத்து அமைச்சர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"நல்லதோர் ஆராய்ச்சியினைச் செய்து பல பரிந்துரைகளை இந்நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள்; இத்தனைப் பரிந்துரைகளையும் நிறைவேற்ற முடியுமா என்று ஐயம் தோன்றுகிறது.

பல நூற்றாண்டுகளாகச் சமுதாயத்தில் இந்தப் பிரச்சினை இருந்துவருகிறது. வாழ்வு நெறி தவறியவர்களைத் திருத்த -- அவ்வாறு ஏற்படாமல் இருக்க -- சமுதாய அமைப்பையே மாற்றிப் புதிய சமுதாயம் அமைக்க முயற்சி எடுக்கவேண்டும்.

சட்டத்தின் மூலமே சமுதாயச் சீரமைப்பு செய்வது என்பது இயலாத நிலை என்றே கருதுகிறேன்.

நான், 'அமைச்சன்' என்ற முறையில் சிறைக்குச் சென்று பார்வையிட்டேன்; அங்கே கைதிகளின் வாழ்க்கை ஒரு மாற்றமும் இல்லாத வழக்கமான நிலையிலேயே இருந்துவருகிறது. சிறைக் கைதிகளுக்காகச் சில பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன; அவற்றை நிறைவேற்றவும் முயற்சி எடுத்து வருகிறோம்; ஆனால், அதில்கூட முழுவெற்றி பெறவில்லை; இந்தப் பரிந்துரை அறிக்கை சமுதாய அமைப்பைச் சீர்திருத்த உதவும் என்பதில் ஐயமில்லை.

சிறையில் உள்ள கைதிகளுக்காக ஒருமுறை ஒரு நிகழ்ச்சி நடந்தது; அந்த நிகழ்ச்சி, சிறைக் கைதிகளின் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளத் துணைபுரியும் வகையில் இல்லை என்பதைக் கண்டேன். சிறைக் கைதிகளைச் சீர்திருத்தக்கூடிய வகையில் கலை நிகழ்ச்சிகள் அமைய வேண்டும். அப்போது அங்கிருந்த சிறை அதிகாரியிடம், 'இந்த நிகழ்ச்சியை ஏன் ஏற்பாடு செய்தீர்கள்? இதன் மூலம் கைதிகள் சீர்திருத்தம் பெறுவார்களா?' என்று கேட்டேன்.

சிறையில் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் அவர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல பலன் அளிப்பனவாக இருக்கவேண்டும்.

நன்னடத்தையைக் கொல்வது என்பது, மேல் நிலையில் இருந்து கீழ்மட்டம்வரை இருந்து வருகிறது; அரசியலிலும் இருக்கிறது.

மக்களிடம் நன்னடத்தை வளர வேண்டும்; மக்களைத் தண்டிப்பதால் மட்டும் நன்னடத்தை வந்துவிடாது; சமுதாயத்தில் வறுமை இருக்கிறது; அதனாலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க முடியாத நிலை இருக்கிறது.

இந்த ஆராய்ச்சி நூல், நகரில் உள்ள நிலையங்களிலிருந்து மட்டும் தகவல் சேகரித்துத் தொகுக்கப்பட்டிருக்கிறது; இதைப்போன்ற ஓர் ஆராய்ச்சியை மாநிலம் முழுவதும் செய்யவேண்டும்; அதன்மூலம் பல நடவடிக்கைகளை எடுத்துச் சமுதாயத்தைச் சீரமைக்க முடியும்.

நாட்டில் உள்ள இந்தியன் பினல் கோடு சட்டமும், குற்றத் திருத்தச் சட்டமும் நீண்டகாலத்திற்கு முன்பு செய்யப்பட்டவை.

இந்தச் சட்டங்கள் எல்லாம் தண்டனை வாங்கித் தருவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. மக்களிடம் மனமாற்றம் ஏற்படுத்தும் வகையில் சட்டங்கள் இருக்கவேண்டும்; இது பற்றியும் ஆராய்ச்சி நடத்துவது நல்லது.

குற்றங்கள் ஏன் வருகின்றன -- குற்றம் இழைக்கும் காரணம் என்ன -- என்பதையும் ஆராய வேண்டும்.

வழக்கறிஞர்களும் தங்களிடம் வரும் வழக்கில், 'இது பொய் வழக்கு; நீதிமன்றம் போனால் தோற்கும்' என்று சொல்ல வேண்டும்.

ஆனால் அப்படி ஒரு இளம் வழக்கறிஞர் சொன்னால், 'நீ இளைஞன்; உனக்குத் தெரியாது' என்று கட்சிக்காரர் நிச்சயம் சொல்லுவார். அதனால், 'பொய் வழக்கு' என்று தெரிந்தும், 'நான் முயன்று பார்க்கிறேன்' என்று வழக்கறிஞர் சொல்லுகிறார்; கீழ் வழக்கு மன்றத்தில் அந்த வழக்கு தோற்றால், 'மேல் மன்றத்துக்கு முறையீடு செய்வோம்' என்கிறார். பிறகு தலைமை நீதிமன்றம்வரை செல்கிறது.

வழக்கில் சம்பந்தப்பட்டது 10 சென்ட் நிலமாக இருக்கும்; அல்லது 20 ரூபாயைப்பற்றிய வழக்காக இருக்கும்; ஆனால், அதற்கு ஆகும் செலவு ஆயிரத்திற்குமேல் போகும்; இந்த நிலைமைகளும் மாறவேண்டும்.

நான், 'அமைச்சர்' என்ற முறையிலும், 'கைதி' என்ற முறையிலும் சிறையைப் பார்த்து இருக்கிறேன். சிறையில் பெரும்பான்மைக் கைதிகள், சட்டப் பிரிவு 55-ன்கீழ் அல்லது 109-ன் கீழ் (சந்தேகத்தின்மீது கைது செய்வது) கைது செய்யப்பட்டவர்களாகவே இருந்தார்கள்; இதுபற்றியும் அதிகாரிகளுடன் விவாதித்தேன்; 'குற்றம் செய்பவர்களைப் பிடிக்கவேண்டும்' என்பதுதான் என் வாதம்.

ஒரு கிராமத்தில் ஒருவர் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; மகனுக்குப் பெண் தேட 10 மைல்—15 மைல் நடந்தே போக வேண்டியிருக்கிறது; 22 மைல் நடந்துவிட்டார்; பகல் முடிந்துவிட்டது; இருள் வந்துவிட்டது; சாலை ஓரமுள்ள ஒரு வண்டிக்கு அருகே படுத்துவிட்டார்; நன்றாக அயர்ந்து தூங்குகிறார்.

நள்ளிரவில் போலீசார் அந்தப் பகுதியில் சோதனைக்காக வருகிறார்கள்; சாலை ஓரத்தில் தூங்குபவரை எழுப்பி, 'உன் பெயர் என்ன? எந்த ஊர்?' என்று கேட்கிறார்கள்; 22 மைல்

(3-ம் பக்கம் பார்க்க)

மதமும் விஞ்ஞானமும் இணையுமா?

இரண்டிலுமுள்ள மாசுகள் அகற்றப்பட வேண்டும்

ஆக்ரா, அக். 8—

"அகிம்சையும் -- விஞ்ஞானமும் இணைந்ததோர் யுகமாகத்தான் எதிர்காலம் இருக்கும்.

"விஞ்ஞானத்தைப் பேணும் மேற்கு நாடுகளும் -- பல மதங்களுக்குப் பிறப்பிடமாகி இன்னமும் மத அடிப்படையைக் கொண்டிருக்கும் கிழக்கத்திய நாடுகளும் ஒன்றாகிக் கொண்டுவருகின்றன.

"ஆனால். விஞ்ஞானமும் மதமும் இணையுமுன், இரண்டிலுமுள்ள மாசு அகற்றப்பட வேண்டும்"

என்று, பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் டாக்டர் டி. எஸ். கோத்தாரி, விழா ஒன்றில் பேசுகையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எஸ். கே. சம்பந்தம் வெளிநாடு பயணம்

கைத்தறித் தூதுக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்

சென்னை, அக். 6—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் எம்.பி. தலைமையில் 5-பேர் கொண்ட தூதுக் குழு, நேற்று டில்லியிலிருந்து ரோமுக்குப் புறப்பட்டது.

இந்திய அரசால் அனுப்பப்படும் இந்தக் குழு, ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளில் கைத்தறித் துணிகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களைப் பெருக்கவும் புதுச் சந்தைகளைக் கண்டறியவும் செல்கிறது.

இந்தக் குழு ரோம், பாரிஸ், ஆம்ஸ்டர்டாம், பிராங்பர்ட், ஹாம்பர்க், புருசல்ஸ் முதலிய நகரங்களில் உள்ள வர்த்தக நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு கைத்தறிக்கான விற்பனைச் சந்தைகளை ஆராய்ந்துகொண்டு இம்மாத இறுதியில் தாயகம் திரும்பும்.

கடப்பையில் வைரம் கிடைக்கும்

ஆராயுமாறு கோரிக்கை

ஐதராபாத், அக். 9—

"ஆந்திரத்தைச் சேர்ந்த கடப்பைப் பகுதியில் நிறைய வைரப் படிவங்கள் இருக்கக்கூடும்; அறிவியல் துறையினரும், நில உட்கூறு ஆய்வாளர்களும் இப்பகுதியை ஆராயவேண்டும்"

என்று அறிவியல் நிபுணர் டாக்டர் சர். சி. வி. இராமன் கருத்தறிவித்துள்ளார்.

உஸ்மானியாப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் சி. வி. இராமன் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:—

"முன்பு அனந்தப்பூர் கர்னூல் மாவட்டங்களில் விஜயவாடாவுக்கு அப்பால் கிருஷ்ணா நதி தீரத்தில் வைரங்கள் காணப்பட்டன; அவை கடப்பைப் பகுதியிலிருந்து கிருஷ்ணா ஆற்றின் மூலம் கொண்டுவரப்பட்டவையாக இருக்கக்கூடும்."

டாக்டர் மில்லருக்கு 60 பரிசுச் சீட்டுகள்!

தமிழ் குடிமகனின் அன்பளிப்பு

கள்ளக்குறிச்சி, அக் 9—

முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் மில்லருக்கு, தமிழ்க் குடிமகன் ஒருவர், தமிழக அரசின் 60 பரிசுச் சீட்டுகளை அன்பளிப்பாக வழங்கினார்.

பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில், அறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழா நடைபெற்றபோது, இவ்வூர் பரிசுச் சீட்டு ஏஜெண்டான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், 60 பரிசுச் சீட்டுகளை டாக்டர் மில்லருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்குமாறு அளித்தார்.

இந்தியாவின் ஆட்சி முறை தோல்வி

21 ஆண்டுகளுக்குப் பின் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது!

மத்திய அரசில் கட்சிச் சார்பற்ற ஆட்சி-- வினோபா பாவே கருத்து

கயை, அக். 8—

"தற்போதுள்ள நாடாளுமன்ற சனநாயக ஆட்சி முறையில், பெருவாரியான எண்ணிக்கையினரை ஒரு சிறிய எண்ணிக்கையினர் ஆளுகின்றனர்; இது அநியாயமாகும்"

என்று தென் பீகார் காங்கிரசு ஊழியர் கூட்டத்தில் பேசுகையில் வினோபா பாவே குறிப்பிட்டுள்ளார்; மேலும் அவர் கூறியதாவது:-

"தற்போதைய ஆட்சி முறை படுதோல்வி அடைந்துவிட்டது என்பதை 21 ஆண்டுக் கால ஆட்சி மெய்ப்பித்துவிட்டது.

"முழுக்க முழுக்க விவசாய நாடாக உள்ள இந்தியா, தனது உணவுக்கு அந்நியரை நம்பியிருக்கும் நிலைமை 'விதியின் விளையாட்டு'தான்!

"உண்மையான 'சுயராஜ்யம்' நிலவ வேண்டுமானால், ஒரு கட்சி சார்பற்ற அரசு மத்தியில் நிலவ வேண்டும்.

"கட்சிச் சின்னமே இருக்கக் கூடாது; தங்களுக்கு விருப்பமுள்ள பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க மக்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும்.

"மக்கள் அரசு இருப்பது அவசியம்; எல்லா வளர்ச்சித் திட்டங்களும் கிராமங்களில்வகுக்கப்பட்டு, ஒவ்வொரு கிராமமும் 'சர்வோதயக் குடியரசு' ஆக விளங்க வேண்டும்."

அறவழி காட்டிய அண்ணல்

‘அகிம்சை’ என்றால் அன்பு ; ‘வன்முறை’ என்றால் பகைமை ; வன்முறையினால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது -- உலகத்தில் அமைதியை ஏற்படுத்த முடியாது. இல்லாவிடில், முதல் உலகப் போருக்குப் பிறகு அமைதி எற்பட்டிருக்க வேண்டுமே ! அமைதி இருந்ததா -- இல்லை !

பிறகு, இரண்டாவது உலகப் போர் வந்தது ; அதை அடுத்தாவது அமைதி ஏற்பட்டதா -- இல்லவே இல்லை !

வன்முறைச் செயல் ஒன்றோடு நின்றுவிடுவதில்லை. ஒரு வன்முறைச் செயலுக்குப் பிறகு அதைவிடப் பெரியதொரு வன்முறைச் செயல் ஏற்படும்.

எந்த ஒரு போரும், அதற்கு முந்தைய போரைவிட அதிகப் பயங்கரமானதாக இருக்கும் ; அடுத்த போர் மிக அதிக அழிவுச் சக்தி வாய்ந்ததாக இருக்கக்கூடும்.

ஒன்று மட்டும் தெளிவானது ; உலகம் விரும்புமானால், அமைதி ஏற்படலாம் ; ஆனால், அகிம்சை வழியில்தான் இது ஏற்பட முடியும். இல்லாவிடில், அணு ஆயுதங்களின் காரணமாக உலகில் இதுவரையில் வரலாறு கண்டிராத வகையில் ஒரு பெரிய போர் ஏற்பட்டு உலகமே அழிக்கப்பட்டு விடக்கூடும் !

பம்பாயில் ஒருநாள், காந்தியார் வன்முறைச் செயல்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார் ; நான் காந்திஜியிடம் கூறினேன் :—

"அகிம்சையைப் பற்றி மக்களுக்கு இவ்வளவு வேகத்துடனும், உணர்ச்சியுடனும் அறிவுறுத்துகிறீர்களே --- உங்களுடன் தொண்டர்கள் இருக்கிறார்கள் ; பணம் தருவதற்குச் செல்வந்தர்கள் இருக்கிறார்கள் ; இவ்வளவு இருந்தும், இந்தியாவின் பல பகுதிகளிலும் வன்முறைச் செயல்கள் நிகழ்ந்தன ; எங்கள் மாநிலத்திலும் செல்வந்தர்கள் இருக்கிறார்கள் ; ஒருவருக்கு வேண்டுமானால் உண்பதற்கு வேண்டியதை அவர்கள் கொடுப்பார்கள் ; ஆனால் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் பணத்தைக் கொடுக்க விரும்பமாட்டார்கள் ; அதோடு, வன்முறைக்கு வேண்டிய ஆயுதங்கள் எங்களிடம் ஏராளமாக இருக்கின்றன ; இவை உங்களிடம் இல்லை ; இருப்பினும், எல்லை மாநிலத்தில் வன்முறைச் செயலே நிகழவில்லை ; இங்கு ஏராளமாக நிகழ்ந்திருக்கின்றன ; இது எப்படி நடந்தது ?"

என்னுடைய கேள்வியைக் கேட்டு காந்தி சிரித்தார் ; ‘அகிம்சை கோழைகளுக்கானது என்று மக்கள் கூறுகிறார்கள் ; ஆனால் அது, உண்மையில் வீரர்களுக்கானது ; எல்லைப் பகுதியில் வன்முறை இல்லாததற்குக் காரணம், அங்குள்ள உங்கள் மக்கள் உண்மை வீரர்கள் என்பதுதான்’ என்று காந்தி பதிலளித்தார்.

பீகாரில் பிரிவினைக் கிளர்ச்சிகள் நடந்துகொண்டிருந்தபோது, நாங்கள் கிராமங்களில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தோம் ; சில முஸ்லிம் அகதிகள், காந்தியிடம் வந்து கூறினார்கள்— ‘காந்தி ; நாங்கள் என்ன செய்ய வேண்டும் ? எங்கு பார்த்தாலும் சண்டையும் கொலைகளும் இருக்கின்றவே ? பாதுகாப்பான நிலை இங்கு இல்லையே’ என்று !

"வீரத்திற்கான பாடத்தைத்தான் நான் கற்பிக்க முடியும் ; நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்" என்று காந்தி பதிலளித்தார்.

"நாங்கள் எப்படி இவ்வாறு செய்யமுடியும் ? எங்களை வெட்டிக் கொன்றுவிடமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது ?" என்று அவர்கள் கேட்டார்கள்

"நான் என்ன உத்தரவாதம் கொடுக்க முடியும் ? ஆனால், உங்களில் யாராவது கொல்லப்பட்டால் அதற்குப் பதிலாக இந்துக்கள், காந்தியின் உயிரைக் கொடுக்கவேண்டியிருக்கும் ; இந்த ஒரு உறுதிமொழியைத்தான் நான் கொடுக்க முடியும்" என்று காந்தி பதில் கூறினார்.

இதைக் கேட்ட அந்த முஸ்லிம்கள், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.

அன்று மாலை ஒரு கூட்டத்தில் காந்தி கூறினார் :—

"முஸ்லிம் மக்களுள் எவராவது கொல்லப்பட்டால் பீகாரில் உள்ள இந்துக்கள் அதற்குப் பதிலாகக் காந்தியின் உயிரைக் கொடுப்பார்கள்—என்று, இந்த ஊரில் உள்ள முஸ்லிம்களுக்கு நான் உறுதிமொழி அளித்திருக்கிறேன்."

காந்தியின் சொற்களில் அன்பும் கருணையும் இருந்தன ; ஆதலால்தான், மக்கள் உள்ளங்களில் அவரது சொற்கள் ஆட்சி செலுத்த முடிந்தது !

ஒரு சிறு கிராமத்தில் நான் உணவு அருந்திக்கொண்டிருந்தபோது, காந்தி கொலை செய்யப்பட்டுவிட்டதாக வானொலியில் செய்தியைக் கேட்டேன் ; இதைக் கேட்டதும் நானும் என்னுடன் இருந்தவர்களும் உணவு அருந்துவதை நிறுத்தினோம் ; அதிர்ச்சி தாங்க முடியவில்லை ; அதற்குப் பிறகு எங்களால் எதையும் உட்கொள்ள முடியவில்லை ; நாங்கள் வெளியே சென்று, ‘குதாய் கித்மத்கார்’ சங்கத்தைச் சேர்ந்தவர்களை வரவழைத்தோம் ; எல்லோருக்குமே, காந்தி கொலை செய்யப்பட்ட செய்தி அதிர்ச்சியைத் தந்தது ; உண்மையாக நேசித்த ஒருவர் -- உண்மையாக உதவி செய்த ஒருவர் -- தங்களது நண்பர் -- தங்களை விட்டுச் சென்றுவிட்டதாக அவர்கள் எண்ணினார்கள் !

அப்துல் கபார்கான்

காந்தி சுட்டுக் கொல்லப்பட்டது, ‘இறைவனு’க்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு குற்றமாகும். வாழ்நாள் முழுவதும் அனைத்தையும் துறந்து -- சிறைக்குச் சென்று இன்னலுற்று -- நாட்டுக்குத் தொண்டு செய்த உத்தமரைக் கொலை செய்வது ஒரு பயங்கரக் குற்றம் !

காந்தியின் மிகச் சிறந்த சாதனை எது ? எதையும் தனியாகச் சொல்வது கடினம் ; எத்தனையோ இருக்கின்றன ; முதலாவதாக இந்திய மக்களிடையே கோழைத்தனத்தை அகற்றி வீரத்தைப் புகுத்தினார் !

இருப்பினும், இந்தியாவுக்கு மட்டுமின்றி, அனைத்துலகுக்கும் அவர் செய்த மிகப் பெரிய தொண்டு, அகிம்சையின் அறிவுரையாகும் !

அவரால்தான் சுதந்தரம் கிடைத்தது. காந்தியின் அகிம்சை பலவீனமானவர்களுக்காக அல்ல -- அது வீரர்களுடையது !

தீங்கு ஏதேனும் நேர்ந்திருந்தால், அது, அகிம்சையினால் நேர்ந்தது அல்ல -- மக்கள் அதை முழுமையாய்ப் புரிந்துகொண்டு, முழுமையாய்ச் செயலாக்காததால்தான் !

காந்தியின் முறைகளினால்தான் இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைத்தது என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

ஆட்சி மாற்றத்திற்குச் சாதகமான ஒரு சூழ்நிலை உருவாயிற்று என்பது உண்மைதான் ; ஆனால் காந்தி இல்லாமல் இருந்தால் அந்தச் சூழ்நிலை மாறுதலை வேறு யார்தான் இவ்வாறு பயன்படுத்திக்கொண்டிருக்க முடியும் ?

காந்தியைக் குறைகூறுவோர் -- அவரைக் குறைத்து மதிப்பிடுவோர் அப்படிச் செய்துகொள்ளட்டும் ; அதுதான் உலகின் போக்கு ! எல்லா மாமனிதர்களுக்கும் இப்படித்தான் நேரிடுகிறது !

அவர், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் எவ்வளவோ காரியங்களைச் செய்தார் ; மக்கள் தொண்டுக்காக எவ்வளவோ இன்னல்களையும், துயரங்களையும் தாங்கிக்கொண்டார் ; ஆனால், அவரது இடம் நிலையானது -- உறுதியானது !

புகழுரைகளினால் அவருடைய தகுதியை உயர்த்த முடியாது ! அதேபோல், குறை கூறுவதனால் உலகின் மதிப்பீட்டில் அவரது தகுதியைக் குறைக்கவும் முடியாது ! அவர் மாமனிதராக இருந்தார் -- இருக்கிறார் -- இருப்பார் !

இத்தகைய ஒரு மனிதரை நாம் எப்படி கௌரவிக்க முடியும் ? எந்த அடிப்படைத் தேவைகள் மக்களுக்கு வேண்டுமென்று காந்தி விரும்பினாரோ, அவற்றை மக்களுக்கு வழங்க வேண்டும்.

காந்தியின் தத்துவத்தை ஒரு கிராமவாசியிடம் நாம் கூறினால் அவர் நம்மிடம் சொல்வார் ;— ‘எனக்கு வயிற்றுப் பசி --- முதலில் உணவு கொடுங்கள் ; எனக்கு உடுக்க உடை இல்லை -- துணிமணிகளைக் கொடுங்கள் ; எனது குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் இல்லை -- அவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடத்தை அமைத்துக் கொடுங்கள் ; என் உடல் நலம் சரியில்லை -- டாக்டரும் இல்லை -- மருந்தும் இல்லை -- என் உடல்நலத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்’ என்று தான் கூறுவார்.

எனவே, வாழ்க்கையின் அடிப்படை வசதிகளை மக்களுக்கு வழங்குவதுதான் காந்தியின் பிறந்த தின நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான மிகச் சிறந்த முறை என்று நான் கூறுவேன்.

—(புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள ‘மகாத்மா காந்தி : 100 ஆண்டுகள்’ என்னும் புத்தகத்திலிருந்து.)

மராட்டியத் தலைநகரில்

அண்ணா பிறந்த நாள் விழா

தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

கவின்மிகு ஊர்வலம் --- பொதுக்கூட்டம் --- கலை நிகழ்ச்சிகள்

பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி கடந்த 30—9—68 மாலை 6-மணியளவில், பம்பாய் சோகேசுவரி எம். ஜி. ஆர். கலைமன்றத்தின் சார்பில் மாபெரும் ஊர்வலம், சோகேசுவரி புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டது.

மன்றத் தோழர்களும், கழகத்தவரும், தோழமைக் கட்சியினரும் மழையில் நனைந்துகொண்டே சென்றனர்.

அண்ணாவின் திருவுருவப் படத்தைக் காரில் வைத்து அலங்கரிக்கப்பட்டு ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்டது. முத்தமிழ்க் குழுவினரின் மேள - நாதசுவர வாத்திய இன்னிசையுடன், காசிமணியின் கும்ப, கரக ஆட்டங்களும் ஊர்வலத்தை அலங்கரித்தன. பி. ஏ. பி. குழுவினரின் வீர விளையாட்டுக்களும் நடைபெற்றன. சிறுவர், சிறுமியர்களின் இலசீம் விளையாட்டுக்களும் ஊர்வலத்தில் இடம் பெற்றிருந்தன. ஊர்வலத்தின் இடை இடையே அதிர்வேட்டுக்களும் முழங்கின.

பம்பாய் தி.மு. கழக முன்னணித் தோழர்களான எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, மற்றும் தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களான எட்மண்ட், அக்கினிராசு, நிலக்கோட்டை முனியாண்டி, புவனகிரி ஏ. கோவிந்தராசன், திருவள்ளூர் எஸ். எம். துரைராசு, ஆப்பூர் பன்னீர்செல்வம் ஆகியோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் குபா வீதி வழியாக சோகேசுவரி பிரேம் நகரில் உள்ள எம். ஜி. ஆர். கலையரங்கத்தை இரவு 9-மணிக்கு அடைந்தது ; உடன் பொதுக்கூட்டம் தொடங்கியது.

எம்.ஜி.ஆர். கலை மன்றச் செயலாளர் கா. கோவிந்தராசு வரவேற்புரை நிகழ்த்தினார்.

கூட்டத்திற்கு, எம். சின்னப்பா தலைமையேற்றார்.

கழகக் கொடியினை எஸ். தியாகராசன் ஏற்றிவைத்தார்.

அண்ணா உருவப் படத்தை திருப்பரங்குன்றம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் அக்கினிராசு திறந்துவைத்தார்.

தோழர் த. மு. பொற்கோ, அண்ணாவின் 60-வது பிறந்த நாள் வாழ்த்துரைகளைக் கூறினார்.

தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. கோவிந்தராசன், எஸ்.எம். துரைராசு, பன்னீர் செல்வம், முனியாண்டி, எட்மண்டு, அக்கினிராசு ஆகியோர், பேரறிஞர் அண்ணாவைப் பற்றியும் அவர்களது வாழ்க்கை முறைகளையும், அவர்களது பண்பாட்டையும், கண்ணியம் நிறைந்த எளிய வாழ்க்கை வரலாறு ஆகியவற்றின் சிறப்பான அம்சங்களையும், இன்றைய நிலையில் அண்ணாவின் தி. மு. கழக ஆட்சியைப் பற்றியும், அளவற்ற சிறப்பான அம்சங்களில் விளக்கங்களில் எடுத்துக் கூறினர்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மன்ற இன்னிசைக் குழுவினரான இராசலட்சுமி – மாணிக்கம் குழுவினரின் இன்னிசை விருந்து நடந்தது.

மன்றத்தைச் சேர்ந்த தங்கராசு குழுவினரின் ‘சாக்ரடீசு’ என்ற ஓரங்க நாடகமும் சிறப்பாக நடந்தது.

மன்றக் குழுவினரான சான்சன் - கஸ்தூரி குழுவினரின் இசைத் தட்டு நடனம் தொடர்ந்து நடைபெற்றது.

எம்.ஜி.ஆர். கலை மன்ற இரவுப் பாடசாலை மாணவர்கட்கு மன்றச் சார்பில் புத்தகங்களை, மன்றத் தலைவர் ஏ. பிச்சமணி, அண்ணா பிறந்த நாள் பரிசாக வழங்கினார். மன்ற இரவு பாடசாலை மாணவர்களின் சார்பாக பெரும் அளவில் எம்.ஜி.ஆர். உருவப் படம் மன்றத்திற்குப் பரிசு வழங்கப்பட்டது.

விழாவுக்கு வருகைதந்திருந்த பெரியவர்கட்கு விழாக் குழுச் செயலாளர் நி. சேசையா, பொருளாளர் க. கந்தசாமி, எஸ். சண்முகம் ஆகியோர் மன்றச் சார்பில் மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தனர். மன்றத் தலைவர் நன்றி நவின்றார்.

சீரணிப் பணி

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுகமணி பேரூராட்சியை அணுகிச் செல்லும் 1¾ மைல் நீளமுள்ள கல்லு வாய்க்கால், வடபாகம்—தென்பாகம் இரண்டு பிரிவிலும் பாயும் குடிமராமத்து வாய்க்காலை 29—9—68 அன்று தூர் எடுக்கும் வேலை திரு. பி. எஸ். சஞ்சீவி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

விழாவிற்கு திரு. எஸ். ஆர். இராமரத்தினமய்யா தலைமைதாங்கினார்.

திரு. எஸ். ஆர். வெங்கடேசஅய்யர், அனைவரையும் வரவேற்றார்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் எம். கெஞ்சப்பன், இப்பணியில் கலந்துகொண்டு பணியில் பங்கு கொண்ட சீரணித் தொண்டர்களையும், பொதுநலத் தொண்டர்களையும் உற்சாகப்படுத்தினார்.

ஒன்றியத்தில் பணிபுரியும் விரிவுத்துறை அலுவலர்களும், கிராம நல ஊழியர்களும் பணியில் பங்கு பெற்றார்கள் ; முதல் நாளாகிய 25—9—68 அன்று சீரணி உறுப்பினர்களும், பொதுநலத் தொண்டர்களுமாக 65 பேர் ஈடுபட்டு சிறந்த பணியாற்றினர்.

ஒன்றிய கல்வி விரிவு அலுவலர் டி. எஸ். இரங்கநாதன் அனைவருக்கும் நன்றிகூற, முதல் நாள் பணி சிறந்த முறையில் செய்து முடிக்கப்பட்டது.

கோத்தகிரியில் சீரணிப் படை

ஒரசோலை, அக். 8—

29—9—68-ல் கோத்தகிரி பேரூராட்சிமன்ற முதல் வார்டு ஒரசோலையில் பி.யூ.சி. பள்ளிக்காகச் சீரணியினர் 25 சென்ட் நிலத்தில் தக்காளித் தோட்டம் அமைத்துக் கொடுத்தார்கள்.

முக்கிய பங்கெடுத்து பணியாற்றிய நிர்வாக அதிகாரி ஜோகி, சுற்றிலும் முள்வேலி அமைத்துக் கொடுத்தார்.

பயிரிடும் முறைகளைக் கிராம சேவகர் எம். நஞ்சன் விளக்கினார்.

ஊராட்சி உறுப்பினரும் தி. மு. கழகச் செயலாளருமான இராமண்ணு, பொருளாளர் நஞ்சன் ஆகியோர் சீரணிக்கு முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் சீரிய முறையில் செய்தனர்.

சட்டமும் தண்டனையும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்துவந்த களைப்பு -- தூக்க நேரம் -- ஏதோ சொல்லுகிறார் ; உடனே சந்தேகத்தின்மீது அவரைக் கைது செய்துவிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட குற்றங்களும் இருக்கின்றன ; இந்த முறைகளை எப்படித் தடுப்பது என்பதையும் ஆராயவேண்டும்.

மக்களுக்குத் தண்டனை தருவது மூலம் சமுதாய மாற்றம் -- முன்னேற்றம் வந்துவிடாது ; மன மாற்றம் வரவேண்டும் ; இதற்கு இந்தக் கருத்தரங்கு சிறிது ஒளி காட்டும் விளக்காக அமையும் என்று கருதுகிறேன்."

மத்திய அமைச்சரின் விஷமக் கூற்று

அரசியல் உள்நோக்கத்துடன் மாநில அரசு பற்றி விமர்சனம்

அவசர முடிவுக்கு வந்த முறைகேடான செயல்

அமைச்சர்கள் நெடுஞ்செழியன்-மாதவன் கண்டனம்

சென்னை, அக். 9—

"மாநில அரசிடமிருந்தோ சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமிருந்தோ உண்மையான நிலைமை என்னவென்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல், தொழிலாளர் நிலைமை பற்றி மத்திய அமைச்சர் ஒருவர் (பக்ருதீன் அலி அகமது) கருத்துத் தெரிவித்திருப்பது முறையல்ல.

"மற்றொரு மத்திய அமைச்சரான ஜெய்சுக்லால் ஹாத்தி (மத்திய தொழிலாளர் நல அமைச்சர்), தொழிலாளர் நிலைமையை தமிழக அரசு சமாளித்துள்ள முறைக்காகப் பாராட்டியிருக்கும்போது, பக்ருதீன் அலி அகமது இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது; இந்தக் கருத்துக்களை அவர் வெளியிடுவதற்கு முன் ஹாத்தியை ஆலோசனை கலந்திருக்கலாம்.

"இங்குள்ள தொழிலாளர் நிலைமை காரணமாக வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு தொழில்களைத் துவக்க முன்வராமல் போய்விடக்கூடும் என்று அவர் அச்சம் தெரிவித்திருப்பதாகத் தோன்றுகிறது; இது நியாயமல்ல; அரசியல் நோக்கம் கொண்டது. இவ்வாறு கூறுவதன் மூலம் அநாவசியமான அச்சத்தை உருவாக்க முயற்சி செய்யப்படுகிறது."

இவ்வாறு, தமிழகத்தில் தொழிலாளர் நிலை பற்றி டெல்லி அமைச்சர் பக்ருதீன் அலி அகமது தெரிவித்த கருத்துரைக்கு மறுப்புத் தெரிவிக்கையில் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்ட அமைச்சர் செ. மாதவன் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரா. நெடுஞ்செழியன்

தமிழக அரசின் தொழிலாளர் நலக் கொள்கை காரணமாகத் தமிழகத்தில் தொழில் அமைதி கெட்டுவிட்டது என்று தொழிலதிபர்கள் தம்மிடம் முறையிட்டார்கள் என்றும், இந்த நிலை நீடிக்குமானால் ஏற்கனவே உள்ள தொழில்கள் பாதிக்கப்படுவதுடன் புதிதாகத் தொழில் துவக்கத் தொழில் அதிபர்கள் தயங்குவார்களென்றும் மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது கூறினர்; இதுபற்றித் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அவர் கூறியதாவது :—

"தொழில் அதிபர்கள் சொன்னதாகச் சொல்லி இந்தக் கருத்தினை மத்திய அமைச்சர் கூறியிருக்கிறார்; ஒரு தரப்பினரை மட்டும் கேட்டுவிட்டு, அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார்; இரு தரப்பினரையும் கேட்டு -- உண்மை நிலைமை என்ன என்பதைத் தெரிந்து அவர் கருத்துத் தெரிவித்திருக்க வேண்டும்; ஆனால், அவர் போகிற போக்கில், ஒருதலைப்பட்சமாகக் கூறிவிட்டுப் போயிருக்கிறார்.

இங்கு வந்தவர் இது குறித்து மாநிலத் தொழில் அமைச்சரிடமோ, தொழிலாளர் நல அமைச்சரிடமோ கேட்கவுமில்லை -- பேசவும் இல்லை.

மத்திய அமைச்சர் ஒருவர் மாநிலத்துக்கு வந்த இடத்தில் சில தொழில் அதிபர்கள் சொன்னதைக் கேட்டுவிட்டு அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்தது முற்றிலும் முறைகேடான செயலாகும். மாநில அமைச்சரிடம் இது குறித்து கேட்காமல் அவர் இப்படிக் கூறியது, கடுமையாக எதிர்க்கத்தக்க ஒன்றாகும்.

இந்த மாநில அரசு கொண்டு வந்த மசோதா அல்லது இந்த மாநிலத் தொழில் துறை எடுத்த நடவடிக்கை ஏதாவது தொழில் அமைதிக்கு ஆபத்தானதாக உள்ளதா—இதை யோசித்து அவர் கருத்துத் தெரிவித்திருக்க வேண்டும்.

மத்திய அமைச்சர் ஒருவர் மாநில அரசின் நடவடிக்கையை விமர்சிப்பது -- ஒரு தரப்பினர் பேச்சைக் கேட்டு ஒருதலைப்பட்சமாக விமர்சிப்பது -- கடுமையான ஆட்சேபனைக்கு உரியதாகும்."

செ. மாதவன்

மத்திய அமைச்சரின் கூற்றுக் குறித்துச் செய்தியாளர்கள், தொழிலாளர் நல அமைச்சர் செ. மாதவனிடம் கருத்து கேட்டனர்; அவர் கூறியதாவது:—

"அமைச்சர் பக்ருதீன் அலி அகமது தமது கருத்தினை வெளியிடுவதற்குமுன், அதைப் பற்றிச் சற்று யோசித்திருக்கவேண்டும்; அல்லது, 'தமிழகத்தின் தொழிலாளர் நலக் கொள்கை சரியானதா தவறானதா' என்பதை மத்திய அமைச்சரவையில் உள்ள தன் சக அமைச்சரைக் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.

இப்படித் தேவையற்ற -- ஒருதலைப்பட்சமான கருத்தினை டெல்லியிலிருந்துவந்து இந்த மாநிலத்தில் சொல்லியிருப்பது, ஒரு பொறுப்புவாய்ந்த மத்திய அமைச்சருக்கு அழகல்ல!

அவர் சொல்லியிருக்கின்ற இன்னொரு கருத்து, விபரீதமானதாகவும் அரசியல் உள்நோக்கமுடையதாகவும் அமைந்துள்ளது; 'ஏற்கனவே உள்ள தொழில்கள் பாதிக்கப்படுவதுடன் புதிதாகத் தொழில் துவங்க யாரும் முன்வரமாட்டார்கள்' என்று அவர் கூறியிருக்கிறார்; இது, அரசியல் உள்நோக்குடன் -- 'தமிழகத்தில் தொழில் துவக்க யாரும் வராதீர்கள்' என்று பயமுறுத்துகிறவகையில் அவர் சொல்லியிருப்பதாகும்; இது, தேவையற்றது; இது பொறுப்பு வாய்ந்த ஒரு மத்திய அமைச்சருக்கு அழகன்று!"

ஒருமைப்பாட்டு உறுதிமொழி

அமைச்சர் முன்னிலையில் அலுவலர்கள் ஏற்றனர்

சென்னை, அக். 8—

சென்னைக் கோட்டையிலுள்ள அணிவகுப்புத் திடலில் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியை தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நடத்திவைத்தார்.

தலைமைச் செயலக ஊழியர்களும், அலுவலர்களும் இந்த உறுதிமொழியை ஏற்றனர்.

வருவாய்த்துறை வாரியத்தில்

வருவாய்த்துறை வாரியத்தில் ஊழியர்களும், மற்றும் உயர் அலுவலர்களும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்; இந்த நிகழ்ச்சி சேப்பாக்கத்தில் 'எழிலக'த்தின் வடபுறமுள்ள பூங்காவில் நடைபெற்றது.

வருவாய் வாரியத்தின் முதல் உறுப்பினரான கெய்வார் இந்த உறுதிப்பாட்டினை முதலில் தமிழிலும், பிறகு ஆங்கிலத்திலும் நடத்திவைத்தார்.

உயர் நீதிமன்றத்தில்

உயர் நீதிமன்றப் பதிவாளரான பி. சந்திரசேகர மேனன், ஒருமைப்பாட்டு உறுதிமொழியை உயர் நீதிமன்ற ஊழியர்களிடையே நடத்திவைத்தார்.

காவல் துறையில்

காவல்துறை ஊழியர்களுக்கும், மற்றுமுள்ள காவல்துறை அலுவலர்களுக்குமான உறுதிமொழியை காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில், ஆணையாளர் நடத்திவைத்தார்.

என்.வி. நடராசன் கல்கத்தா செல்கிறார்

வங்கத் தமிழர் சங்கம் வரவேற்கிறது

சென்னை, அக். 9—

வங்க மாநிலத்தில் கல்கத்தா—அவுராவில் சிறப்பாக இயங்கிவரும் தமிழ் இலக்கியக் கலாச்சார அமைப்பான வங்கத் தமிழர் சங்கத்தின் சார்பாக சங்கத் துணைச் செயலாளர் செ. வீரபத்திரனும், சங்கத்தின் 'அண்ணா மலர்க் குழு' அமைப்புச் செயலாளர் மா. செங்குட்டுவனும் இன்று காலை தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களை -- அவர் இல்லத்தில் சந்தித்து, கல்கத்தாவுக்கு வருகைதர வேண்டுமென அழைத்தார்கள்.

திரு. என். வி. நடராசன் அவர்கள் சங்கத்தின் அழைப்பை ஏற்று, நவம்பர் 23, 24-ந்தேதிகளில் கல்கத்தாவுக்கு வருகைதர இசைவு தெரிவித்தார்கள்.

'அண்ணாவுக்கு அறுபது' நூல் வெளியீட்டு விழா

'அண்ணாவுக்கு அறுபது' என்னும் நூல் வெளியீட்டு விழா, 10—10—68 மாலை 6-30 மணிக்கு சென்னை தியாகராயநகர் வாணி மகாலில், இராசா சர் முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெறும்; கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நூலை வெளியிடுவார்; அமைச்சர்கள் செ. மாதவன், மா. முத்துசாமி, சாதிக்பாட்சா, மற்றும் தோழர்கள் டி. சே. சண்முகம், ஏ. பி. சனார்த்தனம், கவிஞர் வேழவேந்தன், வீ. நூர்முகம்மது ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

பேரூராட்சித் தேர்தலில் கழகத்தவர் வெற்றி

உதகை, அக். 4—

உதகை பேரூராட்சி மன்ற இடைத் தேர்தல் 3—10—68-ல் நடைபெற்றது. போட்டியிட்ட தி.மு.க. தோழர்கள் கே. சித்தன், பி. சி. சண்முகம், ஆறுமுகம், ப. வெள்ளையன், என் ஈ. பசீர், பழனியப்பன் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

வெற்றி பெற்ற தோழர்களைப் பாராட்டும்வகையில் வட்ட தி. மு. க. அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது. வட்டச் செயலாளர் ஆர். இராசு, எம். ஐ. சவுகத் அலி, கே. கே. இப்ராகிம், எஸ். எம். ஜாபர் ஆகியோர் பேசினர்.

டில்லி ஒதுக்கும் தொகை அறிந்துதான் வேலை துவக்கப்படும்

சேலம் உருக்காலை பற்றி அமைச்சர் செ. மாதவன்

சென்னை, அக். 8—

செய்தியாளர் :— "'சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான அடிப்படை வேலைகள் குறைந்த அளவிலாவது தொடங்கப்பட்டுவிடும்' என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியிருந்தாரே -- அப்படி ஏதாவது அடிப்படை வேலை இதுவரையில் தொடங்கப்பட்டிருக்கிறதா ?"

அமைச்சர் செ. மாதவன் :— "தமிழகத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மத்திய அரசு தரவிருக்கும் பணத்தின் அளவு எவ்வளவு என்று தெரிவித்த பின்புதான், சேலம் இரும்புத் தொழிற்சாலையின் துவக்க வேலைகளைத் தொடங்குவது பற்றி முடிவு செய்ய முடியும்; இதுவரையில் மத்திய அரசு, அந்தத் தொகையை முடிவாகக் கூறவில்லை; டெல்லி கூறிய பிறகுதான் நடவடிக்கை எடுக்கமுடியும்; அதுவரையில் நாம் காத்திருக்க வேண்டியதுதான்."

பரிசுச்சீட்டுமூலம் ரூ.50 இலட்சம் மிஞ்சும்

அக்டோபர் 14-ம் நாள் குலுக்கல் நடைபெறும்

சென்னை, அக். 9—

தமிழக அரசு வெளியிட்ட 80 இலட்சம் பரிசுச் சீட்டுகளில் அக். 7-ம் நாள்வரையில் 78 இலட்சம் சீட்டுகளை ஏஜெண்டுகள் பெற்றுச் சென்றுள்ளனர்.

அரசுக் கருவூலங்களிலிருந்து பரிசுச் சீட்டு விற்பனை அக். 7-ம் நாளுடன் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஏஜெண்டுகளிடம் உள்ள பரிசுச் சீட்டுகளைப் பொதுமக்கள், அக் 13-ம் நாள்வரையில் வாங்கலாம்.

விற்பனையாகாமல் கருவூலங்களில் மீதமுள்ள பரிசுச் சீட்டுகள் கொளுத்தப்பட்டுவிடும்.

சென்னை நகர கருவூலங்களில் வெளியிடப்பட்ட 11 இலட்சம் பரிசுச் சீட்டுகளும் ஏஜெண்டுகளால் வாங்கப்பட்டுவிட்டன; மாவட்டங்களிலிருந்து விவரம் கிடைக்கவில்லை.

இந்தத் தடவை 8 வரிசை (சீரிஸ்) பரிசுச் சீட்டுகள் விற்கப்பட்டிருக்கின்றன : எனவே, 8 முதற் பரிசுகள் உண்டு; அதாவது, எட்டுப் பேர்களுக்குத் தலா ரூ. 1-இலட்சம் தரப்படும்.

இந்தச் சீட்டுக் குலுக்கல், அக். 14-ம் நாளன்று காலை 10-மணிக்கு இராஜாஜி மண்டபத்திலும், பாலர் அரங்கிலும் ஒரே நேரத்தில் நடைபெறும்.

இந்தப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் மூலம், பரிசுத் தொகைகள் உட்பட எல்லாச் செலவுகளும் போக அரசுக்கு ரூ 50 இலட்சம் மிச்சப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ச. சோ. கட்சி எம்.எல்.ஏ. மரணம்

சென்னை, அக். 9—

தமிழகச் சட்டமன்ற சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினரான திரு.எஸ். பாலசுப்பிரமணியம் மரணமடைந்துவிட்ட செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

சட்டமன்ற விடுதியில் உள்ள தமது அறையில் உள்ளே தாளிட்டவாறு படுத்துறங்கும் நிலையில் அவர் மரணமடைந்து கிடந்ததாகக் கூறப்படுகிறது.

தாளிட்ட கதவு திறக்காமலே இருந்ததாகவும், அந்த அறையிலிருந்து துர்நாற்றம் வீசியதாகவும், அதன்பேரில் போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுப் போலீசார் வந்து கதவைத் திறந்து பார்த்தபோது, அவர் மாண்டுகிடந்தது தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது.

மாரடைப்பால் மரணமடைந்தாரா -- மரணத்துக்கு வேறு காரணம் ஏதேனும் உண்டா என்பது பற்றிப் போலீசார் புலன் விசாரித்துவருகின்றனர்.

திரு. பாலசுப்பிரமணியம் கடந்த பொதுத் தேர்தலில் கோவை மாவட்டம் பெருந்துறைத் தொகுதியில், முன்னாள் அமைச்சர் திரு. மன்றாடியாரை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றவர் ஆவார்.

எஸ். பி. பிச்சையா மறைவு

சென்னை, அக். 9—

சென்னை மாவட்ட தி. மு. க. பிரதிநிதியும், வண்ணைப் பகுதியில் தீவிர கழகத் தொண்டருமான தோழர் எஸ். பி. பிச்சையா அவர்கள் இன்று காலை இயற்கை எய்திய செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

"மறைந்த செயல்வீரர் பிச்சையா அவர்களது குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் வண்ணைப் பகுதி தி. மு. க. சார்பாக தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது"

என, பகுதிச் செயலாளர் தோழர் பி. கே. மாரியப்பன் தெரிவிக்கிறார்.

குழுக் கூட்டம்

சென்னை 25-வது வட்ட தி.மு.க. சார்பில் மாநகராட்சித் தேர்தல் ஆலோசனைக் கூட்டம், 10-10-68 இரவு 9 மணிக்கு மின்ட் சுப்பராயலு நாயுடு தெரு, 9-ம் எண் இல்லத்தில் நடைபெறும்; திரு. சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அவர்களும் கலந்துகொள்வார்; கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் இளமாறன் கேட்டுக்கொள்கிறார்.

அண்ணாவின் உடல்நிலை

என். வி. நடராசனுக்குத் தகவல்

சென்னை, அக். 8—

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் அண்ணா அவர்களின் உடல்நிலை பற்றி திரு. பரிமளம் தொலைபேசி மூலம் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுக்குத் தகவல் தந்தார். தொலைபேசியில் அவர் தெரிவித்ததாவது :—

அண்ணா அவர்கள் உணவு கொள்வது, உலாவுவது ஆகியவை வழக்கம்போல் நடைபெறுகின்றன.

உடற் பரிசோதனைகள் இன்னும் முடியவில்லை; தொடர்ந்து நடைபெறுகின்றன; 'எக்ஸ்ரே' படமும் எடுக்கப்படவிருக்கிறது.

அண்ணா எப்போது சென்னை திரும்பலாம் என்பதுபற்றி வியாழக்கிழமை முடிவு கூறுவதாக டாக்டர் மில்லர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில், அக். 15-ம் நாள் சென்னை திரும்புவார் என்று வெளியான செய்தி சரியல்ல."

திராவிட முன்னேற்ற [illegible] கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.